# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 116/மா/2026

நாள் 11.08.2026

R. மயில்சாமி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

(1) உதவி ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

(2) பிரபு பெரியசாமி, உரிமையாளர்,
ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை,
திருச்சிராப்பள்ளி. --- எதிர்மனுதாரர்கள்

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 11.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2026 அன்று பெறப்பட்டு 116/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும்ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

மதுரை–18, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 11.04.2026 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“இரா. மயில்சாமி S/o இராமலிங்கம், மனை எண் 5, அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை–18–ல் வசிக்கும் நான் சமூக ஆர்வலரும் மற்றும் RTI Act 2005 ஆர்வலரும் ஆவேன். நீர்நிலைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நலச் சங்கம் செயலாளர் ஆகவும் உள்ளேன். இந்நிலையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உட்பட்ட தில்லைநகர் மேற்கு விரிவாக்கம், 7வது குறுக்கு தெரு, D6 முகவரியில் இயங்கி வரும் ஸ்டார் கிம்ஸ் (STAR KIMS) மருத்துவமனை கட்டிடத்தை பற்றி விவரங்கள் RTI Act 2005 பிரிவு 6(1) மனுவில் உதவி ஆணையர் மற்றும் பொது தகவல் அலுவலர் வார்டு குழு அலுவலகம் 5, திருச்சி அவர்களிடம் கேட்டு இருந்தேன். அதில் ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் 19483 சதுரடிகள் கட்டப்பட்டு உள்ளதாகவும், பக்க திறவிடங்கள் 1.10 மீ கிழக்கு பக்கத்திலும்,1.40 மீட்டர் மேற்கில், 1.40 மீட்டர் வடக்கு பக்கத்திலும், தெற்கு பகுதியில் இடம் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும், மேலும் வாகனம் நிறுத்துவதற்கு 382.40 சதுர மீட்டர் இடம் மட்டும் விடப்பட்டதாக தெரிய வருகிறது.

மேலும் கட்டிடத்தின் நான்கு பக்கங்களிலும் திறவிடம் (side set back) ஆறு மீட்டர் இடைவெளி இடம் விடாமல், சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட மருத்துவமனை கட்டிடம் STAR KIMS மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56, 57 கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டி கடந்த 03.03.2026 தேதியில் மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அவர்களிடம் புகார் மனு பதிவு தபாலில் அனுப்பி இருந்தும் இதுநாள் வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை மிக தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தமிழக அரசாணை எண் 99 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (ஏ) துறை நாள் 21.09.2015–ன்படி எனது புகார் மனுவை பெற்றுக் கொண்ட மூன்று தினங்களுக்குள் ஒப்புகை இரசீதும் மற்றும் முப்பது தினங்களுக்குள் எனது புகார் மனு மீது நடவடிக்கை எடுத்து எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை. எனவே அரசாணையினை மதிக்காமலும், எனது புகார் மனுவில் கூறப்பட்ட ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க தவறிய சம்பந்தப்பட்ட முன்னாள் இன்னாள் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், மேலும் சட்டத்திற்கு புறம்பாக அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டிடம் கட்டப்பட்டும், அரசு விதிகளின்படி உரிய பக்க திறவிடங்கள் 6 மீட்டர் இடைவெளி விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு (Car Parking) போதிய இடைவெளி இடம் விடாமல், கட்டப்பட்ட ஸ்டார் கிம்ஸ் (STAR KIMS) மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56, 57–ன்படியும், மற்றும் தமிழ்நாடு அரசாணை எண் 7 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 10.01.2023–ன் படியும், மேற்படி மருத்துவமனை கட்டிடத்தினை மூடி முத்திரையிட்டும் (Lock and Seal) மற்றும் அகற்றிட (Removal) விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 30.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 5–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தனது 22.05.2026 மற்றும் 19.06.2026 நாளிட்ட கடிதங்கள் ந.க. எண் 3695/2026/எப்1/(வா.கு.அ5)–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

''திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5, வார்டு எண் 22 தில்லைநகர் 6வது குறுக்கு சாலை, மேற்கு விஸ்தரிப்பு நகரளவு வார்டு M பிளாக் எண் 14 நகரளவு எண்கள் 56 & 57, கதவு எண் D6 & D7 கொண்ட இடத்தில் தொழில் ஆலோசனை அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமத்தினரால் திட்ட அனுமதி P.P.No.91/2011, நாள் 13.12.2011–ல் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மாநகராட்சியால் கட்டிட அனுமதி எண்.94/2012 நாள் 29.2.2012–ல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கட்டிட அனுமதியினை தொடர்ந்து நடைபெற்று வந்த கட்டிடமானது அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாகவும், அனுமதி வழங்கப்பட்ட பரப்பளவினைவிட கூடுதலாகவும் கட்டப்பட்டு வந்ததற்கு 1994–ம் ஆண்டு மாநகராட்சி சட்டப்பிரிவு 282(1) (2)–ன்கீழ் 07.08.2013 அன்று முதல் அறிவிப்பு வழங்கப்பட்டு மாநகராட்சி சட்டப் பிரிவு 282(3)–ன்கீழ் 13.08.2013 அன்று உறுதி செய்யப்பட்ட அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்புகளை பெற்று கொண்ட பின்னரும் கட்டிடதாரர் திருத்திய வரைபடமோ, விளக்கமோ சமர்ப்பிக்காததால் 13.09.2013 அன்று குற்றத்தாள் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அபராதமாக தலா ரு.1000/– 17.10.2013 அன்று (STCNo.1289/2013) கட்டிடதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டுமானத்தில் ஸ்டார் கிம்ஸ் எனும் மருத்துவமனை இயங்கி வருகிறது.

மேற்கண்ட மருத்துவமனை கட்டிடம் தொடர்பாக மனுதாரர் திரு ஆர். மயில்சாமி என்பவர் பல்வேறு தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் தகவல்களை பெற்று மனுவில் அனுமதிக்கு மாறுதலாகவுள்ள கட்டிடத்தினை தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டத்தின்கீழ் மூடி முத்திரையிட்டு அகற்றிடுமாறு கோரியுள்ளார். இதனைத் தொடர்ந்து நடைமுறையில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135(1), 135(2), 136(6) பிரிவுகளின் கீழ் முதல் அறிவிப்பு 24.04.2026–ம் கட்டிடதாரருக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட அறிவிப்பு வழங்கப்பட்ட விவரத்தினை 27.04.2026 நாளிட்ட அறிவிப்பு கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பில் வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற நிலையில் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டப் பிரிவு 56 & 57ன்கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிடும் அறிவிப்பு 18.05.2026 அன்று வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 30 நாள் அவகாசம் முடிவுற்ற நிலையில் கட்டிடதாரரிடம் இருந்த எந்த விளக்கமோ கட்டிடத்தின் உபயோக நிறுத்தமோ அனுமதி வழங்கிய வரைப்படத்திற்கு கூடுதலாக கட்டப்பட்ட கட்டுமானத்தை அகற்றவோ இல்லாத நிலையில் தற்போது 19.06.2026 அன்று தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டப் பிரிவு 57(3A)–ன் கீழ் கட்டிடத்தினை 15 தினங்களுக்குள் மூடி முத்திரையிட கட்டிடதாரர்களுக்கும் மருத்துவமனை நிருவாகத்தினருக்கும் 22.06.2026 அறிவிப்பு அன்று வழங்கப்பட்டது. மேற்படி அனுமதிக்கு மாறான கட்டுமானம் தொடர்பாக மனுதாரரின் புகார் மனுவினை தொடர்ந்து உரிய சட்டப் பிரிவுகளின்படி அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மனுதாரரின் புகாரின் மீது எவ்வித காலதாமதமின்றி விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தங்களின் கனிவான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தன்னுடைய 15.06.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''மேல்முறையீடு மனு எண் 116/மா/2026 நாள் 09.06.2026 – விசாரணை நோட்டீஸ் பெற்றுக் கொண்டேன். 23.06.2026 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நேரடியாக மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி விளக்கம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அன்றைய நாளில் 23.06.2026 தேதியில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற கிளையில் வேறு ஒரு வழக்கில் ஆஜராக வேண்டுவதால் அன்றைய தேதியில் நான் நேரடி விசாரணையில் ஆஜராக இயலாது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே எனது ஆவணத்தின் அடிப்படையில் மேல்முறையீட்டு மனு எண் 116/மா/2026 வழக்கினை உரிய விசாரணை செய்து எனது புகார் மனு 03.03.2026ல் கூறியவாறு உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.''

6. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 5–ன் உதவி ஆணையர் மற்றும் வார்டு 22–ன் உதவிப் பொறியாளர் (திட்டம்) ஆகியோர் 23.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள விதி மீறி கட்டிடம் கட்டியது தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5, வார்டு எண் 22 தில்லைநகர் 6வது குறுக்கு சாலை மேற்கு விஸ்தரிப்பு நகரளவு வார்டு M பிளாக் எண். 14 நகரளவு எண்கள் 56 & 57, கதவு எண் D6 & D7 கொண்ட இடத்தில் தொழில் ஆலோசனை அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமத்தினரால் திட்ட அனுமதி P.P.No.91/2011, நாள் 13.12.2011–ல் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மாநகராட்சியால் கட்டிட அனுமதி எண்.94/2012 நாள் 29.02.2012–ல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கட்டிட அனுமதியினை தொடர்ந்து அக்கட்டிடத்தில் ஸ்டார்கிம்ஸ் மருத்துவமனை இயங்கி வருகிறது. அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாகவும், அனுமதி வழங்கப்பட்ட 10,262 சதுரடிக்கு மாறாக சுமார் 29,591 சதுரடி பரப்பளவில் கூடுதலாக கட்டப்பட்டு வந்ததற்கு 1994–ம் ஆண்டு மாநகராட்சி சட்டப்பிரிவு 282(1) (2)–ன்கீழ் 07.08.2013 அன்று முதல் அறிவிப்பு வழங்கப்பட்டு மாநகராட்சி சட்டப் பிரிவு 282(3)–ன்கீழ் 13.08.2013 அன்று உறுதி செய்யப்பட்ட அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்புகளை பெற்று கொண்ட பின்னரும் கட்டிடதாரர் திருத்திய வரைபடமோ, விளக்கமோ சமர்ப்பிக்காததால் 13.09.2013 அன்று குற்றத்தாள் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அபராதமாக தலா ரு.1000/– 17.10.2013 அன்று (STCNo.1289/2013) கட்டிடதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135(1), 135(2), 136(6) பிரிவுகளின் கீழ் முதல் அறிவிப்பு 24.04.2026–ல் கட்டிடதாரருக்கு வழங்கப்பட்டது.

மேற்கண்ட அறிவிப்பில் வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்ற நிலையில் 18.05.2026 அன்று தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டப் பிரிவு 56 & 57ன்கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிடும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவிப்பின்படி 30 நாள் காலஅவகாசம் முடிவுற்ற நிலையில் கட்டிட உரிமையாளர் எவ்வித மாறுதல் செய்யாததால், 22.06.2026 அன்று தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டப்பிரிவு 57 (3A)–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்."

7. இரண்டாம் எதிர்மனுதாரர் தனது 23.06.2026 நாளிட்ட மின்னஞ்சலில் உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவரின் அறிவுரைப்படி ஓய்வெடுக்க வேண்டியுள்ளதால், 23.06.2026 அன்று நடைபெறவிருந்த விசாரணைக்கு ஆஜராக இயலாததால், விசாரணையை மாற்று தேதியில் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

8. இரண்டாம் எதிர்மனுதாரர் கோரியவாறு, மேற்கண்ட மனுதாரரின் மனு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.07.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, மனுதாரருக்கும் மற்றும் முதலாம் எதிர்மனுதாரரான திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையருக்கும் நகலிடப்பட்டது.

9. மனுதாரர் தன்னுடைய 10.07.2026 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பாக கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"முறையீட்டு மனு எண் 116/மா/2026, முறையீட்டு மனு எண் 138/ந/2026 மற்றும் ஆதித்யா மருத்துவமனை, திருப்பரங்குன்றம், மண்டலம் 5 ஆகிய மூன்று வழக்குகளிலும் 14.07.2026 ஆஜராகி விளக்கம் அளிக்க இயலாது. நான் 12.07.2026 முதல் 14.07.2026 தேதிகளில் தொழில் விசயமாக கேரளா மாநிலம் திருவனந்தபுரம் அருகில் பாரசாலை ஊருக்கு செல்ல வேண்டியுள்ளதால், நான் நேரடி விசாரணைக்கு ஆஜராக இயலாது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு தெரிவித்து கொள்கிறேன். மேலும் எனது முறையீட்டு மனுவில் இணைக்கப்பட்டுள்ள புகைப்படம் மற்றும் ஆவணத்தின் அடிப்படையில் உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுகிறேன். மேலும் மூன்று மருத்துவமனை கட்டிடங்களும் பக்க திறவிடங்கள் ஆறு மீட்டர் இடைவெளி இடம் (side set back) விடவில்லை. அதில் ஒரு அடி கூட இடைவெளி விடவில்லை. மேலும் வாகனம் நிறுத்துவதற்கு இடம் விடவில்லை. தமிழ்நாடு மாவட்ட நகர் ஊரமைப்பு துறையில் உரிய திட்ட அனுமதி பெறவில்லை என்பதால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56, 57 கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்."

10. முதல் எதிர்மனுதாரர் தரப்பில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 5ல் உதவிப் பொறியாளர் (திட்டம்) 14.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மேற்கண்ட கட்டிடத்தின் கள ஆய்விற்கு பின் உரிமையாளருக்கு, ஏற்கனவே விசாரணையில் தெரிவித்ததின் தொடர்ச்சியாக பின்வரும் தாக்கீதுகள் வழங்கப்பட்டன.

(1) 24.04.2026 – 1998 வருடத்திய தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135/1 பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு–Reminder Notice for Regularizing the building.

(2).18.05.2026 – 1972 வருடத்திய தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச்சட்டம் – 56 மற்றும் 57 பிரிவின் கீழ் பிறப்பிக்கப்படும் அறிவிப்பு – Notice for Lock and Seal.

(3) 22.06.2026 – 1972 வருடத்திய தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட சட்டம் 57 (3A) பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பு – Final Notice for Lock and Seal தாக்கீதுகள்.

இத்தாக்கீதுகளின் தொடர்பாக ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை சார்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P (MD) No.19529 of 2026 தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கின் தீர்ப்புரையின் அடிப்படையில் மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தின் மீது உரிய சட்ட பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

11. இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ச. சதீஷ்குமார் என்பவர் 14.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தில்லை நகர், 6வது குறுக்கு தெருவில் இயங்கும் ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை கட்டிடத்தின் மீது திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் பெறப்பட்ட புகார் தொடர்பாக திருச்சி மாநகராட்சியால் தாக்கீதுகள் வழங்கப்பட்டன. இதன் தொடர்பாக ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை சார்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P (MD) No.19529 of 2026 தொடரப்பட்டுள்ளது, அவ்வழக்கில் தீர்ப்புரை வரும்வரை திருச்சிப்பள்ளி மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ள கூடாது என்று கோரப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

12. முறையீட்டு மனுதாரரின் மனு, கடிதங்கள், முதலாம் எதிர்மனுதாரரான திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கைகள், 23.06.2026 அன்றைய விசாரணையில் ஆஜரான வார்டு குழு அலுவலகம் 5–ன் உதவி ஆணையர், வார்டு 22–ன் உதவிப் பொறியாளர் (திட்டம்) ஆகியோரின் வாக்குமூலம், 14.07.2026 அன்றைய விசாரணையில் முதலாம் எதிர்மனுதாரரான திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சார்பாக ஆஜரான மண்டலம் 5ல் உதவிப் பொறியாளர் (திட்டம்)–ன் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ச. சதீஷ்குமார் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உட்பட்ட தில்லைநகர் மேற்கு விரிவாக்கம், 7வது குறுக்கு தெரு, D6 முகவரியில் இயங்கி வரும் ஸ்டார் கிம்ஸ் (STAR KIMS) மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும் கட்டப்பட்டு உள்ளதாகவும், அரசு விதிகளின்படி கட்டிடத்தின் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடத்தில் (side set back) ஆறு மீட்டர் இடைவெளி இடம் விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு (Car Parking) போதிய இடைவெளி இடம் விடாமலும் கட்டப்பட்டுள்ளது என்பதும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 56, 57–ன்படியும், மற்றும் தமிழ்நாடு அரசாணை எண் 7, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் 10.01.2023–ன் படியும், மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தினை மூடி முத்திரையிட்டும் (Lock and Seal) மற்றும் அகற்றிடவும் (Removal) விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் கடிதங்கள் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள விதி மீறி கட்டிடம் கட்டியது தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 5, வார்டு எண் 22 தில்லைநகர் 6வது குறுக்கு சாலை மேற்கு விஸ்தரிப்பு நகரளவு வார்டு M பிளாக் எண். 14 நகரளவு எண்கள் 56 & 57, கதவு எண் D6 & D7 கொண்ட இடத்தில் மாநகராட்சியால் கட்டிட அனுமதி எண்.94/2012 நாள் 29.02.2012–ல் வழங்கப்பட்டு, அக்கட்டிடத்தில் ஸ்டார்கிம்ஸ் மருத்துவமனை இயங்கி வருகிறது என்பதும், அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாகவும், கூடுதலாகவும் மேற்கண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், 1994–ம் ஆண்டு மாநகராட்சி சட்டப்பிரிவு 282(1) (2)–ன்கீழ் 07.08.2013 அன்று முதல் அறிவிப்பு வழங்கப்பட்டும், மேற்படி சட்டப் பிரிவு 282(3)–ன்கீழ் 13.08.2013 அன்று உறுதி செய்யப்பட்ட அறிவிப்பும் வழங்கப்பட்டது என்பதும், மேற்கண்ட அறிவிப்புகளை பெற்று கொண்ட பின்னரும் கட்டிடதாரர் திருத்திய வரைபடமோ, விளக்கமோ சமர்ப்பிக்காததால் 13.09.2013 அன்று குற்றத்தாள் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அபராதமாக தலா ரூ.1000/– 17.10.2013 அன்று (STCNo.1289/2013) கட்டிடதாரரால் செலுத்தப்பட்டது என்பதும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) 135(1), 135(2), 136(6) பிரிவுகளின் கீழ் முதல் அறிவிப்பு 24.04.2026–ல் கட்டிடதாரருக்கு

வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவுற்றதால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டப் பிரிவு 56 & 57ன்கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிடும் அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், இவ்வறிவிப்பின்படி 30 நாள் காலஅவகாசம் முடிவுற்ற நிலையில் கட்டிட உரிமையாளர் எவ்வித மாறுதல் செய்யாததால், 22.06.2026 அன்று தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 57 (3A)–ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், இத்தாக்கீதுகளின் தொடர்பாக ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை சார்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P (MD) No.19529 of 2026 தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதால், வழக்கின் தீர்ப்புரையின் அடிப்படையில் மேற்கண்ட மருத்துவமனை கட்டிடத்தின் மீது உரிய சட்ட பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் வார்டு குழு அலுவலகம் 5–ன் உதவி ஆணையர், வார்டு 22–ன் உதவிப் பொறியாளர் (திட்டம்) ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, தில்லை நகர், 6வது குறுக்கு தெருவில் இயங்கும் ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை கட்டிடத்தின் மீது திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் பெறப்பட்ட புகார் தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் தாக்கீதுகள் வழங்கப்பட்டன என்பதும், இதன் தொடர்பாக ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை சார்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P (MD) No.19529 of 2026 தொடரப்பட்டுள்ளது, அவ்வழக்கில் தீர்ப்புரை வரும் வரை திருச்சிப்பள்ளி மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ள கூடாது என்று கோரப்பட்டுள்ளது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ச. சதீஷ்குமார் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, தில்லை நகர், 6வது குறுக்கு தெருவில் இயங்கும் ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை கட்டிடம் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும், அரசு விதிகளின்படி கட்டிடத்தின் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடத்தில் (side set back) ஆறு மீட்டர் இடைவெளி இடம் விடாமலும், வாகனங்கள் நிறுத்துவதற்கு (Car Parking) போதிய இடைவெளி இடம் விடாமலும் கட்டப்பட்டுள்ளதால், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் தாக்கீதுகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை சார்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P (MD) No.19529 of 2026 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 5ன் உதவிப் பொறியாளர் (திட்டம்)–ன் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ச. சதீஷ்குமார் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் சூழ்நிலையில், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளப்பட்டது.

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014, Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2026**–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் **11**–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை

(2) ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

(3) உதவி ஆணையாளர்,
வார்டு குழு அலுவலகம்–5,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
புத்தூர், திருச்சிராப்பள்ளி–1.

(4) திரு. பிரபு பெரியசாமி,
உரிமையாளர், ஸ்டார் கிம்ஸ் மருத்துவமனை,
கதவு எண் D6 & D 7, தில்லை நகர்,
6வது குறுக்கு தெரு, திருச்சிராப்பள்ளி–620 018.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(6) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.